<u>2026 மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 57/2025</u>

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

திரு.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – சிவசந்ரு |
| தகப்பனார் பெயர்: | தங்கப்பாண்டியன் |
| ஊர்: | தேவாரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 25 |

13.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். சாட்சி நீதிமன்ற காவலில் இருந்து PT Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்).

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, தேவாரம், பெரிய ஓடை தெருவில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உடன் பிறந்த தம்பியாவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 27.02.2025 ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் நானும், எனது தம்பியும் வேலையை முடித்து வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தோம். உயர்நிலை நீர்த்தொட்டி அருகில் கூட்டமாக இருந்தது. கூட்டத்தில் அதிகமான நபர்கள் இருந்தார்கள். போலீசார் என்னிடம் வெற்றுத்தாளில் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையததுதான். புகாரில் உள்ள விபரங்கள் என்ன என்று எனக்கு

தெரியாது. அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. 27.02.2025ம் தேதி இரவு 11.30 மணிக்கு நானும், எனது தம்பியும் வேலையை முடித்துவிட்டு, வீட்டிற்கு வரும்போது, ஜெயச்சந்திரனும், விக்னேஷ்வரனும் எங்கள் வீட்டு கதவை எட்டி உதைத்து, அசிங்கமாக திட்டினார்கள் என்றும், நானும், எனது தம்பியும் சத்தம் கேட்டு வந்தப்போது, அசிங்கமாக பேசி கையால் அடித்து பிரச்சனை செய்தார்கள் என்றும், எனது தாயை ஜெயச்சந்திரன் சேலையை பிடித்து இழுத்து மானப்பங்கப்படுத்தினார் என்றும், நாங்கள் தடுத்தப்போது, ஜெயச்சந்திரன் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து ஓங்கிக் குத்தியப்போது நான் விலகிக்கொண்டதால் கத்தி என்மீது படாமல் கீழே விழுந்து, சத்தம் கேட்டு தெருவில் இருந்தவர்கள் வந்தவுடன் எதிரிகள் இருவரும் கொலைவிடுத்து சென்றார்கள் என்றும், சம்பவம் குறித்து தேவாரம் காவல்நிலையத்தில் நான் எழுத்துமூல புகார் கொடுத்தேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளும் நாங்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.13 18:50:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
13.03.2026